DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :150/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -3 (LW -5)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சதீஸ்குமார் | Caste | : | |
| Father Name | : | திரு.பெரியசாமி | Calling | : | கி.நி.அ |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **03.07.2026.**

**PW -3 (LW -5 )**

**(1-**வது எதிரி ஆஜர் இல்லை**,** பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி**. 2-**வது எதிரி ஆஜர்**.)** (சாட்சி சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் 17.06.2019 அன்று வாளசிராமணி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது எனது வட்டாட்சியர் உத்தரவின் பேரில் மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து பணி செய்ய சொன்னார்கள். அன்று காலை 11.30 மணிக்கு மணல் ஏற்றி வந்த தகவலின் பேரில் அஞ்சலம் – தேவானூர் சாலையில் செட்டி அண்ணன் என்பவர் தோட்டத்தில் ஒரு மணல் வண்டி நின்றிருந்தது. அதில் மணல் இருந்தது. தா.பேட்டை காவல் துறையினர் அங்கு வந்து ஆஜர் எதிரி போல் இருந்தவரை போலீசார் விசாரித்தார்கள். வண்டியில் இருந்த இரண்டு பேரையும் போலீசார் விசாரித்தார்கள்.

அவர்கள் மணல் ஏற்றி வந்ததை ஒப்புக்கொண்டார்கள். அதை பதிவு செய்து என்னிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கினார்கள். அந்த மணல் மற்றும் வண்டியை கைப்பற்றியதற்கு நான் கைப்பற்றுதல் மகஜரிலும் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் சொல்லியுள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் போலீசார் சொல்லி நீங்கள் சென்றீர்களா அல்லது நீங்கள் சென்ற பொழுது போலீசார் வந்தார்களா? |
| **பதில்** | போலீஸ் ஏற்கனவே அங்கு இருந்தார்கள். |
| **கேள்வி** | அந்த வாகனத்தை போலீசார் எந்த இடத்தில் எங்கு பிடித்தார்கள் என்று நீங்கள் பார்க்கவில்லை என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த வாகனம் என்ன வாகனம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் சென்று கையெழுத்து செய்து 5 நிமிடத்தில் புறப்பட்டு விட்டீர்களா? |
| **பதில்** | 10 நிமிடங்கள் கழித்து புறப்பட்டேன். |
| **கேள்வி** | அதன் பிறகு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்தார்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அவ்வாறு காவல் நிலையம் சென்ற பொழுது போலீசார் உங்களை விசாரணை செய்து எழுதி கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 03.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 03.07.2026

II ADJ COURT, TRICHY